MAALAI MALAR

12 NOV 2022

PAGE 6

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# பி.எச்.டி. படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, நவ.12—

புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

புதுவை பல்கலைக் கழகத்தில் 2022—23—ம் கல்வியாண்டுக்கான நுழைவுத்தேர்வு விலக்கு பெற்ற பிரிவினருக்கான பி.எச்.டி. மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது.. விண்ணப்பதாரர்கள் புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் பல்வேறு பாடப்பிரிவுக்கு விண்ணப்பிக்கலாம். வருகிற 23—ந் தேதியுடன் விண்ணப்பிக்கும் காலம் முடிவடைகிறது. மேலும் தகவலுக்கு பல்கலைக்கழக இணையதளத்தை பார்வையிடலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.